DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

............

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE AT PALLIPATTU

Calendar

Miscellaneous

Preliminary Register                    Case No.C.C. 126 of 2017 PW : 7

Sessions

Prosecution

Deposition of witness for    Defence

Court

Name : திரு. சொ. ரவி

Father's Name : திரு. சொக்கலிங்கம்

Village :

Taluk :

Caste :

Calling :கூடுதல் சாட்சி

Religion :

Age : 59

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.7.2026

**<u>தேதி..24.07.2026 ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 126/2017, அ.த.சா.7, திரு. சொ. ரவி, த/பெ. சொக்கலிங்கம், வயது 59 அவர்களை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செயய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பொதட்டுர்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 09.07.2017 அன்று இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளை விசாரணை செய்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் என்பவர் தற்போது பணிஓய்வு பெற்று உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக வாழ்ந்து வருகிறார். அவரால் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது காணொளி மூலமாக ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாத சூழ்நிலையில் இருப்பதால் அவருடன் நான் பணிசெய்த காரணத்தினால் அவரது கையொப்பம், கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் என்பதால் அவருக்காக அவர்நான் தற்போது பொதட்டுர்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 09.07.2017 அன்று இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகளை விசாரணை செய்து எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் என்பவர் தற்போது பணிஓய்வு பெற்று உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக வாழ்ந்து வருகிறார். அவரால் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது காணொளி மூலமாக ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாத சூழ்நிலையில் இருப்பதால் அவருடன் நான் பணிசெய்த காரணத்தினால் அவரது கையொப்பம், கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் என்பதால் அவருக்காக அவர் இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்த குற்ற இறுதியறிக்கை ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 09.07.2017 அன்று பகல் 10.00 மணியளவில் உதவி ஆய்வாளர் திரு. பாலகிருஷ்ணன் நிலையபொறுப்பில் இருந்தபோது இவ்வழக்கின் புகார்தாரர் வெங்கடேசன், த/பெ. கிருஷ்ணன், ராஜா தெரு, பொம்மராஜிபேட்டை கிராமம், பள்ளிப்பட்டு என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 249/2017 U/Sec. 380 IPC ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3. பின்னர் இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10,07.2017 அன்று காலை 10.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் முரளி மற்றும் ராமமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடமான பொம்மராஜிபேட்டை கிராமம் ராஜா தெருவில் வெங்கடேசன் என்பவரது வீட்டை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் அடையாளம் கண்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். **அந்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் அ.த.சா.ஆ 11 மற்றும் 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

4. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் வெங்கடேசன், மணிகண்டன், திருமலை, பூபதி, முரளி, ராமமூர்த்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வாக்குமூலங்கள் பதிவு செய்ததின் அடிப்படையில் சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததாலும் எதிரிகளை கைது செய்ய நடவடிக்கை மேற்கொண்டதில் 10.07.2017 பகல் 13.00 மணிக்கு வாணிவிலாசபுரம், சவூட்டுர், பொதட்டுர்பேட்டை ஆகிய இடங்களை கண்காணித்துவிட்டு பின்னர் மேல்பொதட்டுர் ஈஸ்வரன் கோயில் அருகே சந்தேகத்திற்கு இடமாக நின்றிருந்த தனஞ்செழியன், த/பெ. நடராஜன் என்பவரை கைது செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்தஒ

ஒப்புதல் வாக்குமூலத்தை 13.00 மணிமுதல் 14.00 மணிவரை சாட்சிகள் திருமலை மற்றும் பூபதி ஆகியோர் முன்னிலையில் பதிவுசெய்துள்ளார். **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 14.15 மணிக்கு அவர் அவரிடம் இருந்து எடுத்த ஆஜர் செய்த I Phone 5S ஒன்றை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் கூறியபடி 14.45 மணிக்கு அவரது பாட்டி வீடான சொரக்காய்பேட்டை நடுத்தெருவில் அவர் மறைத்து வைத்திருந்து எடுத்து ஆஜர் செய்த இவ்வழக்கில் காணாமல் போன கைப்பேசி ASUS Zenfone 3 ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. பின்னர் எதிரி மற்றும் தடயங்களுடன் நிலையம் வந்து எதிரியிடம் இருந்து கைப்பற்றிய இவ்வழக்கு சொத்துக்களுக்கு படிவம் 91 – 2 படிவங்கள் தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு வழக்கு சொத்துக்களை ஒப்படைத்துள்ளார். **அந்த படிவங்கள் முறையே அ.த.சா.ஆ. 16 மற்றும் 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்குச்சொத்துக்கள் P.I. 91/2017, P.I.No. 92/2017 என குறியீடு செய்யயப்பட்டுள்ளது. **அவை முறையே அ.சொ.பொ. 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீதும் ஏற்கனவே பதிவு செய்த சட்டபிரிவான இ.த.ச. 380ன் கீழ் குற்ற இறுதியறிக்கையை தாக்கல்

செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல்

எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

**ஒப்பம் – K. வெங்கடேசன், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நடுவர்**
**பள்ளிப்பட்டு(FAC)**